

# வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளில் ஆட்சிமையை வலுப்படுத்துதல்

*மதுரை கூடலரங்கம் 2013*

**வளர்ச்சிக்கான அறிவூட்டல்**

செப்டம்பர் 14, 2013



### அறிமுகம்

வேளாண்மை நம் நாட்டின் பிரதான முதன்மைத்தொழில் என்பது அனைவரும் அறிந்த உண்மை. 75 விழுக்காட்டிற்கும் அதிகமான நில உடைமைகள் சிறு மற்றும் குறுநில உடைமைகளைக் கொண்டதாகும். இத்தகைய சிறு மற்றும் குறுநில உடைமைகளைக் கொண்டு விவசாயம் செய்வது எண்ணற்ற சவால்களை உள்ளடக்கியது. இந்த சவாலான நிலைமையில் விவசாயத்தை வலுப்படுத்த பலதரப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகையால் விவசாயிகளுக்கான ஓர் அடித்தளம் உருவாக்கப்பட்டு விவசாய வளர்ச்சிக்கான உகந்த நிலைமையையும், விவசாய வளர்ச்சித்தொடர்பான நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் நிலையும் உருவாக்கப்படவேண்டும். இத்தகைய அமைப்புகள் மூலமே சிறு மற்றும் குறு விவசாயிகள் சுயசார்புத்தன்மையுடன் கூடிய நிலைப்புத்தன்மையை அடைய முடியும்.

### மதுரை கூடலரங்கம் 2013

மதுரை கூடலரங்கமானது 2003 ஆம் ஆண்டு முதலே வளர்ச்சிப் பணியில் உள்ள வெவ்வேறு நிறுவனங்களை இணைக்கும் பாலமாகவும், வளர்ச்சி பணியில் ஏற்படும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நல்ல இடமாகவும் விளங்குகிறது. இந்த ஆண்டு மதுரை கூடலரங்கம் ஆறாவது முறையாக வளர்ச்சிக்கான ஆட்சிமை என்ற தலைப்பில் நடைபெற உள்ளது.

இதன் அடிப்படையில் களஞ்சியம் அறக்கட்டளையானது, “வேளாண் உற்பத்தியாளர்கள் அமைப்புகளில் ஆட்சிமையை வலுப்படுத்துதல்” என்ற தலைப்பில் மக்கள் கருத்துப்பட்டறை ஒன்றை வருகின்ற செப்டம்பர் 14இ 2013 அன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை, மதுரை கூடலரங்கத்தில் நடத்த உள்ளது. பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றார்கள்.





### கருத்துப்பட்டறையின் நோக்கம்

1. “வேளாண் உற்பத்தியாளர் குழுக்களின் நிறுவன கட்டமைப்பை முறைப்படுத்துவது.
2. மக்கள் நிறுவன கட்டமைப்பில் உள்ள சிறப்பம்சங்களையும், நிறுவன முறைகளையும் வெளிக் கொணர்தல்
3. வேளாண் உற்பத்தியாளர் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வெற்றி பெற்றுக்கொண்டிருப்பவர்கள் மற்றும் வேளாண் உற்பத்தி அமைப்புகளின் சிறந்த அனுபவங்களை பகிரச் செய்தல்
4. வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளின் எதிர்கால திட்டமிடல்

### கருத்துப்பட்டறையின் வெளிப்பாடு

கருத்துப்பட்டறையின் மூலம் வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளின் நிறுவன முறைகளையும், நிறுவன கட்டமைப்பையும் அனைத்து வேளாண் உற்பத்தியாளர் குழுக்களிலும் ஒரு சேர நடைமுறைப்படுத்துவது, மற்றும் சிறந்த செயலாக்க அனுபவப் பகிர்வுகளை மற்ற விவசாயிகளும் நடைமுறைப்படுத்துவது.

### கருத்துப்பட்டறையில் பங்கேற்போர்

இந்த கருத்துப்பட்டறையில் வேளாண் உற்பத்தியாளர் குழுக்களின் பிரதிநிதிகளும். அனுபவமிக்க வேளாண் உற்பத்தியாளர்களும், உற்பத்தியாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு மற்றும் அரசு சாரா வேளாண் நிறுவன அலுவலர்களும் பங்கேற்க உள்ளனர்.

### நிகழ்ச்சி நிரல்

காலை 10 மணி
முதல் மாலை 4 மணி வரை

- ✍ சிறப்புரை:
  - வேளாண் உற்பத்தியாளர் குழுக்களின் கட்டமைப்பு பலன்களும் அதன் சவால்களும்
  - வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனையில் நிறுவன கட்டமைப்பு மற்றும் முறைகள்
- ✍ வேளாண் உற்பத்தியாளாகள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வெற்றி பெற்றவர்களின் — அனுபவ பகிர்வு
- ✍ சிறு குழு விவாதம்
- ✍ செயல்திட்டம் வரைவு

**இடம்:** மதுரை கூடலரங்கம், 2013, தமுக்கம் மைதானம், மதுரை, தமிழ்நாடு.

**தேதி:** செப்டம்பர்,14‘2013



## களஞ்சிய அறக்கட்டளை




தானம் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட முதல் நிறுவனம் களஞ்சிய அறக்கட்டளை நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், ஏழைப்பட்ட பெண்களுக்கு சுய உதவிக்குழுக்களை ‘களஞ்சியம்‘ என்ற அடையாளத்துடன் உருவாக்கி இதனை வட்டார அமைப்புகளாக ஏற்படுத்தி குறுநிதி, மற்றும் அதற்கு அப்பாற்பட்ட திட்டங்களை சுகாதாரம், காப்பீடு, கல்வி, நீர்வளம் போன்ற திட்டங்களை ஊக்குவித்து பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாடுபட்டு வருகின்றது. மேலும் அரசாங்கம், வங்கிகள், மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து களஞ்சியங்கள் மற்றும் வட்டாரக் கூட்டமைப்புகளை மேம்படுத்துகின்றது.

இந்நிறுவனம் இந்தியாவில் 11 மாநிலங்களில் 40,250 குழுக்களுடன் 6,05,097 உறுப்பினர்களுடன், 9,153 கிராம மற்றும் நகர்புறங்களில் 194 வட்டார கூட்டமைப்புகளுடன் இயங்கி வருகின்றது. இந்நிறுவனம் வரும் 2017—ஆம் ஆண்டில் 10 இலட்சம் ஏழை குடும்பங்களை சென்றடைய திட்டம் வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.


தங்களின் பங்கேற்ப்பினை உறுதி செய்ய வேண்டிய முகவரி

M. மாலினி / K. ராஜலெட்சுமி / J. மோகன்
களஞ்சிய அறக்கட்டளை
1A, வைத்தியநாதபுரம் கிழக்கு, மதுரை 16. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302503—510, கைபேசி: 9865653678
மின்னஞ்சல்: kfpomdu@dhan.org, maduraisymposium@dhan.org
இணையதளம்: http://maduraisymposium.net, www.dhan.org